பெர்மெனன்ட்டாக அதை க்ளோஸர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அந்த பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும், ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கும் அதிகமாகத் தண்ணீர் கிடைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்கலம் கண்மாயைப் பொறுத்தவரையில் 47 மடைகள் அல்ல, 48 மடைகள் இருக்கின்றன. அது மிகப் பெரிய கண்மாய் என்பதை அரசு அறியும். அந்த கண்மாய்க்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக, கீழ்நாட்டார், மேல்நாட்டார் பிரிவு கால்வாயின் வாயிலாக தண்ணீர் கொண்டு வருவதற்கு நீர் வள மேம்பாட்டு தொகுப்பு திட்டத்தின் கீழ் ஏறத்தாழ தொன்னூற்று இரண்டு இலட்சத்து, தொன்னூற்று ஏழாயிரம் ரூபாய் ஒதுக்குவதற்காக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலக வங்கித் திட்டம் நிறைவேற்றுகின்றபோது இதற்குரிய பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. கே. முனிவெங்கடப்பன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கா. பூ. முனுசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

29—

இராயக்கோட்டையில் வீட்டு வசதித் துறையின் மூலம் வீடுகள் கட்டுதல்

44924—திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், இராயக்கோட்டையில் வீட்டு வசதித் துறையின் மூலம் வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1995 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், இராயக்கோட்டையில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமம் என்னுடைய தொகுதியிலே வருகிறது. இது கிராம பஞ்சாயத்தாக இருந்தாலும் சுற்றுப்புறங்களிலே வளர்ந்து வருகின்ற ஒரு நகரமாக இருக்கிறது. எனவே, எதிர்காலத்தினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பகுதியிலே கையகப்படுத்துவதற்குரிய நிலம் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை இணைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தர்மபுரி மாவட்டம், இராயக்கோட்டை பகுதியில் வீடு கட்டுவதற்காக 1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பத்திரிக்கையிலே விளம்பரம் செய்து, இராயக்கோட்டையிலுள்ள பொதுமக்களிடத்திலே வீடுகள் தேவையா என்று ஒரு தேவை கணிப்பு நடத்தப்பட்டது. அதிலே ஒரு விண்ணப்பம்கூட வரவில்லை. எனவே, அரசு அதனைப் பரிசீலிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 30, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

30—

தமிழ்நாடு விவசாய இடுபொருள் வாணிபக் கழகம் அமைத்தல்

24692—திரு. கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள்களை விநியோகம் செய்ய "தமிழ்நாடு விவசாய இடுபொருள் வாணிபக் கழகம்" அமைக்க அரசு முன்வருமா?